P6 PRELIMINARY
TESTPAPER 7

PRIMARY SCHOOL

PRELIMINARY EXAMINATION - 2015

TAMIL LANGUAGE - PAPER 2

PRIMARY 6

Name : ____________________

Class : Pr 6____________

Date :

Time For Booklets A and B: 1 hour 40 minutes


INSTRUCTIONS TO CANDIDATES

Do not open this booklet until you are told to do so.

Follow all instructions carefully.

Answer all questions.

## அன்பாக இரு




தொட்டியில்
ஆமைகள்
யாருக்கும் தெரியாமல்
குச்சியால் குத்தி
துன்புறுத்தி

அறைக்குள் வந்தார்
கண்டித்தார்
தவற்றை உணர்ந்து
பிராணிகளிடம்
மன்னிப்பு

# P6 PRELIMINARY
# TESTPAPER 7

**Q1 முதல் Q23 வரையுள்ள வினாக்களுக்கு OAS விடைத்தாளில் சரியான விடையின் எண்ணுள்ள (1, 2, 3, அல்லது 4) நீள்வட்டத்தை நிழலிடு.**

## 'அ' பிரிவு

**A1 வேற்றுமை**

**Q1 முதல் Q6 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான வேற்றுமை உருபு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (12 மதிப்பெண்கள் )**

ஓர் ஊரில் முத்து என்றொரு நெசவுத் தொழிலாளி இருந்தான். அவன் அழகான (Q1)____________ நெய்து வாழ்க்கை நடத்தி வந்தான். அவன் வாழ்வதற்குத் தேவையான பொருள் கிடைத்து வந்தது. ஆனால், அவனுக்கு இன்னும் அதிகமாகப் பொருள் ஈட்ட வேண்டுமென்ற ஆசை ஏற்பட்டது. அவன் வேறொரு நாட்டிற்குச் செல்ல நினைத்தான். அவன் முடிவை தன் (Q2)____________ கூறினான். அவள் தன் (Q3)____________ முடிவை மாற்ற முயற்சி செய்தாள். ஆனால், அவன் தன் (Q4)____________ உறுதியாக இருந்தான். அவன் வேறொரு (Q5)____________ சென்று, கடுமையாக உழைத்தான். தேவையான பொருள் சேர்ந்ததும் விவசாயி (Q6)____________ ஊருக்குத் திரும்பினான். அப்பணத்தைக்கொண்டு அவன் தன் குடும்பத்துடன் மகிழ்ச்சியுடன் வாழ்ந்தான்.

Q1 (1) ஆடைகளில்
(2) ஆடைகளை
(3) ஆடைகளுக்கு
(4) ஆடைகளால்

Q2 (1) மனைவியுடன்
(2) மனைவிக்கு
(3) மனைவியிடம்
(4) மனைவியை

Q3 (1) கணவனின்

(2) கணவனால்

(3) கணவனை

(4) கணவனுக்கு

Q4 (1) தீர்மானத்தில்

(2) தீர்மானத்திலிருந்து

(3) தீர்மானத்தோடு

(4) தீர்மானத்தின்

Q5 (1) ஊரில்

(2) ஊரின்

(3) ஊருடன்

(4) ஊருக்கு

Q6 (1) தன்னோடு

(2) தனது

(3) தன்னால்

(4) தனக்கு

<u>A2 செய்யுள்/ பழமொழி</u>

Q7 முதல் Q12 வரையுள்ள செய்யுள் / பழமொழியை நிறைவு செய்வதற்கு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில் அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (12 மதிப்பெண்கள்)

Q7 வருமுன்னர்க் காவாதான் ____________ எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்.

(1) வாழ்க்கை
(2) பண்பு
(3) கல்வி
(4) கருமம்

Q8 முயற்சி உடையார் ____________ அடையார்.

(1) புகழ்ச்சி
(2) இகழ்ச்சி
(3) மகிழ்ச்சி
(4) தளர்ச்சி

Q9 பதறாத ____________ சிதறாது.

(1) செயல்
(2) வாழ்வு
(3) காரியம்
(4) பணி

Q10 செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் ________.

(1) சிறப்பு
(2) அறம்
(3) தலை
(4) பெரிது

Q11 இயல்வது ________.

(1) விலக்கேல்
(2) இகழேல்
(3) ஒழியேல்
(4) கரவேல்

Q12 இளமையில் ________ முதுமையில் வறுமை.

(1) கல்வி
(2) உழைப்பு
(3) செல்வம்
(4) சோம்பல்

## B3 தெரிவுவிடைக் கருத்தறிதல்

பின்வரும் கதையைக் கருத்தூன்றிப் படி.

அக்காலத்தில் அயோத்தியை ஆண்ட மன்னருக்கு இரண்டு பிள்ளைகள் இருந்தனர். மூத்தவனின் பெயர் பரதன்; இளையவனின் பெயர் வரதன். இருவரும் எல்லா வீரக்கலைகளையும் கற்றுச் சிறந்த வீரர்களாக விளங்கினர்; நற்குணங்கள் நிறைந்த நல்லவர்களாகவும் இருந்தனர். தன் புதல்வர்கள், மிகச் சிறந்த மன்னர்கள் என்று வரலாற்றில் இடம்பெற்றுத் தமது பெயரையும் வரலாற்றில் நிலைப்பெறச் செய்யவேண்டும் என்பதே மன்னரின் ஆசை. அதனால் முதுமையடைந்த மன்னர் தாம் இறக்கும் முன் அயோத்திக்குப் பரதனை அரசனாகவும் மதன்புறம் என்ற நாட்டிற்கு வரதனை அரசனாகவும் முடி சூட்டினார். அதன்பிறகு சில மாதங்களில் இறந்தும் விட்டார்.

பரதன் பல நாடுகள்மீது படையெடுத்துச் சென்று அவற்றைக் கைப்பற்றினான். கடைசியாக மதன்புறத்துக்கும் படையெடுத்துச் சென்றான். அப்போது தன் தம்பியின்மீது படையெடுத்துச் சென்றதைப் பற்றி அவன் வருந்தவில்லை. தான் பல சிறிய நாடுகளைக் கொண்டமைந்த பெரிய தேசத்தை ஆண்ட பேரரசன் என்று சரித்திரத்தில் இடம்பெற்றுத் தன் தந்தையின் ஆசையை நிறைவேற்றவேண்டும் என்ற எண்ணமே அவனது மனதில் மேலோங்கியிருந்தது.

வரதன் தன் அண்ணனைப் போர்முனையில் சந்தித்தான். "அண்ணா! எந்த உயிரையும் அழிக்கும் உரிமை எவருக்கும் இல்லை. அதனால் என் நாட்டு மக்களின் உயிரைக் காக்க நானே மதன்புறத்தை உங்களிடம் தந்துவிடுகிறேன்," என்றான். பரதன் வெகுண்டு, "மதன்புறத்தை வீரப்பரிசாக அடைவேனே தவிர தானம் பெற்றான் பரதன் என்ற இழிச்சொல்லுக்கு ஆளாகமாட்டேன்!" என்று சூளுரைத்தான்.

"சாந்தம் அண்ணா!. தானம் என்று ஏன் கருதுகிறீர்கள்? மதன்புறமும் நம் தந்தையின் நாடுதானே. அதனால் இதில் உங்களுக்கும் உரிமையுள்ளது அல்லவா!?" என்று வரதன் எடுத்துக்கூறினான். ஆனால் அதற்குப் பரதன் உடன்படவில்லை. "மதன்புறம் உனக்கெனத் தந்தையால் தரப்பட்டது. போரிட்டே பெறுவேன்!" என்றான் பரதன். "சரி! அப்படியானால் நாம் இருவர் மட்டும் யுத்தம் செய்வோம். வென்றவருக்குத் தோற்றவர் அடிமையாகவேண்டும்." என்ற வரதனின் பேச்சுக்குப் பரதன் இணங்கினான். பின் இருவரும் போரிட்டனர். அதில் வரதனே வென்றான்,

"வரதா! ஒப்பந்தப்படி நானும் என் நாடும் உனக்கு அடிமை! இதோ என் அரச வாளை உன் பாதத்தில் வைத்துவிட்டேன்," என்று கூறிய பரதன் தலைகுனிந்து நின்றான். "அண்ணா! என்ன வார்த்தை சொல்லிவிட்டீர்கள்? பல நாடுகளில் வெற்றிக்கொடி நாட்டிய பெரும் வீரனான நீங்கள், எனக்கு அடிமை ஆவதா? வேண்டாம்! தேவையற்றப் போரில் மக்களை வீணே பலியிடக்கூடாது என்பதை உணர்த்தவே நான் இவ்வாறு செய்தேன். நீங்கள் நாட்டின் வளர்ச்சியிலும் மக்களின் வாழ்க்கைமீதும் அக்கறை செலுத்தவேண்டும். நாட்டை ஆளும் ஆசை எனக்கு இல்லை. கடவுளுக்குச் சேவை செய்வதையே என் மனம் நாடுகிறது! அதனால் மதன்புறத்தை உங்களிடமே ஒப்படைக்கிறேன்," என்று கூறிவிட்டு வரதன் காட்டுக்குத் தவம் செய்யப் புறப்பட்டான். தம்பியின் தியாகமும் அன்பும் புரியாமல் அவனுடன் போரிட்டோமே என்று வருந்திய பரதன் நாட்டை நீதி தவறாமல் சிறப்பாக ஆண்டான்.

Q13 முதல் Q17 வரையுள்ள வினாக்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியையொட்டி அமைந்துள்ளன. ***ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு.*** அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (10 மதிப்பெண்கள்)

Q13 இளவரசர்கள் எப்படிப்பட்டவர்கள்?

(1) சிறந்த பண்புநலன்களை உடையவர்கள்
(2) பல்வேறு வீரக்கலைகளில் சிறந்த வீரர்கள்
(3) வரலாற்றில் இடம்பெற விரும்பியவர்கள்
(4) நற்பண்புகள் நிறைந்த சிறந்த போர்வீரர்கள்

Q14 பரதன் ஏன் பல நாடுகளைக் கைப்பற்றினான்?

(1) அவன் பெயர் வரலாற்றில் இடம்பெறுவதற்காக
(2) அவன் தன் தந்தையின் ஆசையை நிறைவேற்றுவதற்காக
(3) அவன் பல நாடுகளுக்கு அரசனாகுவதற்காக
(4) அவன் பேரரசன் என்று போற்றப்படுவற்காக

Q15 வரதன் கூறியதைக் கேட்ட பரதன் ஏன் வெகுண்டான்?

(1) தன் தம்பியுடன் போர்ப்புரிய விரும்பியதால்
(2) போர்ப்புரிந்து நாட்டைத் தானம் பெற விரும்பியதால்
(3) போர்ப்பரிசாக நாட்டைப் பெற விரும்பியதால்
(4) போர்ப்புரிந்த வீரனென வரலாற்றில் இடம்பெற விரும்பியதால்

Q16 அரசர்கள் மட்டும் ஏன் யுத்தம் செய்தனர்?

(1) ஒருவன் மற்றவனுக்கு அடிமையாக வாழவேண்டுமென்பதால்
(2) வரதனுக்கு நாட்டை ஆள விருப்பமில்லாததால்
(3) மற்ற உயிர்கள் அழிந்துபோவதை வரதன் விரும்பாததால்
(4) வரதன் கூறியதைக் கேட்டுப் பரதன் கோபம்கொண்டதால்

Q17 வரதன் பரதனிடம் என்ன கேட்டுக்கொண்டான்?

(1) போரில் தோல்வியுற்ற பரதன் யாருக்கும் அடிமையாகி வாழக்கூடாது
(2) பரதன் எந்தக் காரணத்துக்கும் தம் மக்களைப் போருக்குப் பலியாக்கக்கூடாது
(3) பரதன் மதன்புறத்தை மட்டும் வளம்பெறச் செய்து சிறப்பாக ஆளவேண்டும்
(4) பரதன் மக்களின் நலனில் அக்கறைகொண்டு நாட்டை வளம்பெறச் செய்யவேண்டும்

B4 சொற்பொருள்

**Q18 முதல் Q20 வரையுள்ள சொற்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியில் இடம்பெற்றவை. அவற்றின் பொருளை உணர்த்தும் சரியான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (6 மதிப்பெண்கள்)**

Q18 விளங்கினர்

(1) வாழ்ந்தனர்
(2) திகழ்ந்தனர்
(3) வளர்ந்தனர்
(4) உயர்ந்தனர்

Q19 வெகுண்டு

(1) நகைத்து
(2) வெட்கப்பட்டு
(3) சீற்றமைடைந்து
(4) அதிர்ந்து

Q20 நாடுகிறது

(1) விழைகிறது
(2) தேடுகிறது
(3) தவிக்கிறது
(4) செல்கிறது

**B5 கருத்து விளக்கப்படக் கருத்தறிதல்**

பின்வரும் விளம்பரத்தைக் கருத்தூன்றிப் படி:

*தமிழை நேசிப்போம் தமிழில் பேசுவோம்*

*என்ற நோக்கத்துடன் தமிழ்மொழி இயக்கம் பெருமையுடன் வழங்கும்*

# மாபெரும் தமிழ் மொழி விழா

கொண்டாட்டத்தில் கலந்துகொண்டு தமிழின்பத்தில் திளைக்க
அனைவரும் வாருங்கள்...

உயர்நிலைப்பள்ளி
மாணவர்களே!
உங்களுக்கான

**சொற்களம் 2010**

தேசிய விவாதப்போட்டிகளின்
இறுதிச்சுற்று

வசந்தத்தில் நேரடி ஒளிபரப்பு!

தொடக்கநிலைப்பள்ளி
மாணவர்களுக்கான

***மின்மினி 2010***

பாட்டுப்போட்டி!

முதல் பரிசு — ரொக்கம் $1000
இரண்டாம் பரிசு - ரொக்கம் $750
மூன்றாம் பரிசு — காசோலை $500

**சிங்கையின் முதல்**
**தமிழ்த்திரைப்படம் 2010**

நம் உள்ளூர் கலைஞர்கள் நடிப்பில்
தோன்றிய திரைப்படக்காவியம்

வெளியீடு காணும் நாள் 1.7.2010.

அம்பிகா திரையரங்கில்
இரவு மணி 7.30 முதல் 11.00 வரை

முதல் முறையாக அரங்கேறும் அரிய
நிகழ்ச்சியைக் காணத் தவறாதீர்கள்!

**இந்த இரண்டு போட்டிகளுக்கான சுற்றுகள்**

**தேர்வுச்சுற்று**
நாள்: 2.11.2010
இடம்: சாரதா கழகம்
நேரம்: காலை 9

**இறுதிச்சுற்று**
நாள்: 4.12.2010
இடம்: கல்சா மண்டபம்
நேரம்: காலை 9

தேர்வு பெறும் அனைவருக்கும்
சிங்கையின் முதல் தமிழ்த்திரைப்படம்
காண இலவச நுழைவுச்சீட்டுகள்!

உணவு வழங்கிய கலைஞர் சங்கத்தின் ஆதரவுக்கும்
இந்திய வர்த்தகச் சங்கத்தின் நன்கொடைக்கும் நன்றி!

**Q21 முதல் Q23 வரை இடம்பெற்றுள்ள வினாக்கள் முன்பக்கத்தில் தரப்பட்டுள்ள விளம்பரத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (6 மதிப்பெண்கள்)**

**Q21. இந்த மாபெரும் விழாவில் இதுவரை காணாத அங்கம் யாது?**

**(1) மின்மினி 2010**
**(2) சொற்களம் 2010**
**(3) திரைப்படக்காவியம் 2010**

**Q22. இந்த மாபெரும் விழாவின் ஏற்பாட்டுக் குழு யாது?**

**(1) கலைஞர் சங்கம்**
**(2) தமிழ்மொழி இயக்கம்**
**(3) இந்திய வர்த்தகச் சங்கம்**

**Q23. பாட்டுப்போட்டியில் இரண்டாவதாக வெற்றிப் பெறுபவருக்கு என்ன பரிசு கிடைக்கும்?**

**(1) ரொக்கம் மட்டும்**
**(2) ரொக்கமும் இலவச நுழைவுச்சீட்டும்**
**(3) இலவச நுழைவுச்சீட்டும் காசோலையும்**

## ஆ' பிரிவு

### C6 ஒலி வேறுபாட்டுச் சொற்கள்

**பின்வரும் பகுதியில் Q24 முதல் Q28 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்குப் பொருத்தமான ஒலி வேறுபாட்டுச் சொற்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கு ஏற்ற மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. (10 மதிப்பெண்கள்)**

Q24. முத்துவின் கடையில் நிறைய எலிகள் இருந்தன. அவன் அவற்றை ______________ வைத்துப் பிடித்தான். 24. ( )

Q25. நான் அந்த மேசையின் அகலம் ______________ இரண்டையும் அளந்தேன். பின, விடைகளைப் பயிற்சித்தாளில் எழுதினேன். 25. ( )

Q26. அரசரின் ______________ கேட்டு காவலர்கள் நடுநடுங்கினர். அவர்கள் அதை உடனே நிறைவேற்ற முற்பட்டனர். 26. ( )

Q27. மூதாட்டி வங்கியிலிருந்து பணத்தை எடுத்துக்கொண்டு சென்றுகொண்டிருந்தார். அப்போது ஒரு திருடன் அவரை வழி ______________ திருடத் திட்டமிட்டான். 27. ( )

Q28. என் தாத்தா அதிக ______________ கொடுத்து ஒரு பேனாவை வாங்கினார். அது பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருந்தது. 28. ( )

| | | | |
|---|---|---|---|
| (1) | மறித்து | (2) | நீலம் |
| (3) | விளை | (4) | மரித்து |
| (5) | பொரி | (6) | விலை |
| (7) | ஆனை | (8) | பொறி |
| (9) | நீளம் | (10) | ஆணை |

10

D7 முன்னுணர்வுக் கருத்தறிதல்

**பின்வரும் பகுதியில் Q29 முதல் Q35 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு ஏற்ற சொற்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து** *ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கு ஏற்ற மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து* **அதன் எண்ணை அடிகோட்டின் எதிரேயுள்ள அடைப்புக்குள் எழுது.**

**(14 மதிப்பெண்கள்)**

| | |
|---|---|
| ஒரு வேடன் உணவு தேடு வனத்துக்குச் சென்றான். அங்கே ஒரு மான்கூட்டம் மேய்ந்துகொண்டிருப்பதை அவன் **(Q29)**________ உடனே அவன் ஒரு மான்மீது **(Q30)**________ எய்து கொன்றான். இறந்துபோன மானைத் தூக்கிக்கொண்டு அவன் தனது **(Q31)**________ திரும்பிக்கொண்டிருந்தான். வழியில் ஒரு பெரிய கரடி அவனை **(Q32)**________ வந்தது. அதனால், வேடன் மானைக் கீழே போட்டுவிட்டு அந்தக் கரடியின்மீது கணையை எய்தான். | Q29. ( )<br>Q30. ( )<br>Q31. ( )<br>Q32. ( ) |
| கரடி வலி தாங்க முடியாமல் வேடன்மீது **(Q33)**________ அவனைக் கடித்துக் குதறியது. **(Q34)**________ காயமடைந்த வேடன் அங்கேயே வீழ்ந்து மாண்டான். அவன் மேல் கரடி இறந்து கிடந்தது. அச்சமயம் அவ்வழியாக மிகுந்த **(Q35)**________ ஒரு நரி வந்தது. கீழே கிடந்த மூன்று உடல்களையும் பார்த்து, "ஆகா! இன்னும் சில நாட்களுக்கு எனக்கு விருந்துதான்!" என்று நினைத்தது. அது மகிழ்ச்சியுடன் மானின் இறைச்சியைப் புசிக்கத் தொடங்கியது. | Q33. ( )<br>Q34. ( )<br>Q35. ( ) |

| | | |
|---|---|---|
| (1) கேட்டான் | (2) பாய்ந்து | (3) பசியுடன் |
| (4) பலத்த | (5) தள்ளிக்கொண்டு | (6) கண்ணுற்றான் |
| (7) துப்பாக்கி | (8) அம்பு | (9) சிறிது |
| (10) நெருங்கி | (11) ஏறி | (12) இருப்பிடத்திற்கு |

14

**D8** <u>சுயவிடைக் கருத்தறிதல்</u>

**பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படி.**

அமெரிக்காவில் பிறந்த டானியா ஏபி (Dania Eby) கல்வியில் சிறந்து விளங்கவில்லை. அவள் பலமுறை பள்ளித் தேர்வுகளில் தோல்வியுற்றாள். அவளைக் கல்லூரிக்கு அனுப்புவது காலத்தையும் பணத்தையும் விரயம் செய்வதாகும் என்று அவளின் தந்தை எண்ணினார். ஆகவே, அவர் டானியாவிடம், "உனக்குத் தண்டனையாக நான் ஒரு பாய்மரப் படகை வாங்கித் தரப்போகிறேன். அதில் நீ உலகைச் சுற்றித் தனியாகப் பயணம் மேற்கொள்ள வேண்டும்," என்று கூறினார்.

டானியா நியூயார்க் (New York) துறைமுகத்திலிருந்து தன் கடற்பயணத்தைத் தொடங்கினாள். இரவு வானின் நட்சத்திரங்களைக் கொண்டு திசையறிந்து தனது படகை வழி செலுத்தக் கற்றுக் கொண்டாள். அமெரிக்கன் சமோவா தீவுக்கருகே (Samoa Island) சென்றபோது, ஒரு பயணியைக் கண்டாள். அவனுக்காக இரக்கப்பட்டு அவன் மற்றொரு தீவைச் சென்றடையும்வரை தன் பாய்மரப் படகில் ஏற்றிச் சென்றாள். கடற்பயணத்தின்போது அவள் தன் பயணத்தில் சில பிரச்சனைகளை எதிர்நோக்கினாள். ஒரு சமயம் புயல் காற்றில் சிக்கி அவளது படகு தலைகீழாகக் கவிழ்ந்தது. மற்றொரு தடவை அவளின் படகு ஒரு கப்பலின்மீது மோதியது. பயணம் முடிந்ததும் அவள் மீண்டும் அமெரிக்காவுக்கே வந்து சேர்ந்தாள்.

உலகைச் சுற்றி இதுநாள் வரை தனியாகக் கடற்பயணம் மேற்கொண்ட அனைவரைக் காட்டிலும் டானியாதான் மிக இளம் வயதுப் பெண். மேலும் இத்தகைய சாதனையைச் செய்த முதல் அமெரிக்கப் பெண்ணும் அவள்தான். எனவே, படகுப்பயண சாதனைப் பதிவேட்டில் அவள் பெயர் இடம்பெற்றிருக்கும் என்று பலரும் நம்பினார்கள். ஆனால், அமெரிக்கன் சமோவா தீவுக்கருகே ஒரு பயணியைத் தன்னுடன் அழைத்துச் சென்றதால், கப்பலில் ஒரே நேரத்தில் இரண்டு பேர் இருக்க நேர்ந்தது. இக்காரணத்தினால் அவள் மேற்கண்ட இரண்டு சாதனைகளையுமே இழக்க நேர்ந்தது!

அதற்குப் பின், டானியா அவளது பயண அனுபவங்களைப் பற்றிய புத்தகம் எழுதுகிற பணியில் ஈடுபட்டாள். அப்போது அவள், " புத்தகம் எழுதுவது உலகைத் தன்னந்தனியே பாய்மரப் படகில் சுற்றி வந்ததை விடக் கடினமானது!" என்று கூறியிருந்தாள்.

Q36 முதல் Q41 வரையுள்ள வினாக்களுக்கு மேற்கண்ட பகுதியிலிருந்து விடைகளைக் கண்டறிந்து எழுது. (20 மதிப்பெண்கள்)

Q36. டானியாவின் தந்தை அவளுக்கு ஏன் தண்டனை வழங்கினார்?
(4 மதிப்பெண்கள்)

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

/ 4

Q37. டானியா ஏபி படகை ஓட்ட எப்படிக் கற்றுக் கொண்டாள்?
(2 மதிப்பெண்கள்)

Q38. பாய்மரப் படகு அமெரிக்கன் சமோவா தீவுக்கருகே சென்றபோது என்ன நேர்ந்தது? (3 மதிப்பெண்கள்)

5

Q39. கடல் வழியே பயணம் செய்தபோது டானியா ஏபி என்னென்ன பிரச்சனைகளைச் சந்தித்தாள்? (4 மதிப்பெண்கள்)

Q40. டானியாவின் பெயர் படகுப்பயண சாதனைப் பதிவேட்டில் இடம்பெற்றிருக்கும் என்று ஏன் பலரும் நம்பினார்கள்? (4 மதிப்பெண்கள்)

8

Q41. டானியா தன் கடற்பயணத்துக்குப் பின் என்ன செய்தாள்?
(3 மதிப்பெண்கள்)

(முற்றும்)

3

**P6 PRELIMINARY TESTPAPER 7**

(1) 2 (2) 3 (3) 1 (4) 1 (5) 4 (6) 2
(7) 1 (8) 2 (9) 3 (10) 3 (11) 4 (12) 4
(13) 4 (14) 2 (15) 3 (16) 3 (17) 4
(18) 2 (19) 3 (20) 1
(21) 3 (22) 2 (23) 1
(24) 8 (25) 9 (26) 10 (27) 1 (28) 6

முன்னுணர்வுக் கருத்தறிதல்

29. 6
30. 7
31. 2
32. 1
33. 10
34. 5
35. 11

<u>சுயவிடைக் கருத்தறிதல்</u>

36. டானியாவின் தந்தை அவருக்கு ஏன் தண்டனை வழங்கினார்? (4 மதிப்பெண்கள்)

36. டானியா கல்வியில் சிறந்து விளங்காததால்(1) அவர் பலமுறை பள்ளித் தேர்வுகளில் தோல்வியுற்றார் (1). அவரைக் கல்லூரிக்கு அனுப்புவது காலத்தையும் பணத்தையும் வீண் செய்வதாகும் (1) என்று எண்ணியதால் டானியாவின் தந்தை அவருக்குத் தண்டனை வழங்கினார்.
(கருத்து 3, மொழி 1)

37. டானியா ஏபி பட்கை ஓட்ட எப்படிக் கற்றுக் கொண்டாள்? (2 மதிப்பெண்கள்)

37. இரவு வானின் நட்சத்திரங்களைப் பார்த்து திசையை அறிந்து (1) டானியா தன் படகை ஓட்டக் கற்றுக் கொண்டார். (கருத்து 1, மொழி 1)

38. பாய்மரப் படகு அமெரிக்கன் சமோவா தீவுக்கருகே சென்றபோது என்ன நேர்ந்தது? (3 மதிப்பெண்கள்)

38. பாய்மரப் படகு அமெரிக்கன் சமோவா (Samoa) தீவுக்கருகே சென்றபோது, கடலில் இடையிடையே வந்த கப்பல்களில் பயணம் செய்து வாழ்ந்து வந்த ஒரு

பயணியைப் பார்த்து இரக்கப்பட்டு (1) அவன் மற்றொரு தீவைச் சென்று அடையும்வரை (1) அவனைத் தன் பாய்மரப் படகில் ஏற்றிச் சென்றார். (1)
(கருத்து 3, மொழி 1)

39. கடல் வழியே பயணம் செய்தபோது டானியா ஏபி என்னென்ன பிரச்சனைகளைச் சிக்கினாள்? (4 மதிப்பெண்கள்)

39. கடல் வழியே பயணம் செய்தபோது ஒரு சமயம் புயல் காற்றில் சிக்கி (1) டானியாவின் படகு தலைகீழாகக் கவிழ்ந்தது. (1) மேலும் மற்றொரு முறை அவரின் படகு ஒரு கப்பலின்மீது மோதியது. (1) இவை போன்ற பிரச்சனைகளில் டானியா சிக்கினாள்.
(கருத்து 2 3 மொழி 1)

40. டானியாவின் பெயர் படகுப்பயண சாதனைப் பதிவேட்டில் இடம்பெற்றிருக்கும் என்று ஏன் பலரும் நம்பினார்கள்? (4 மதிப்பெண்கள்)

40. டானியா, உலகைச் சுற்றி இந்நாள் வரை தனியாகக் கடற்பயணம் மேற்கொண்ட (1) அனைவரைக் காட்டிலும் மிக இளம் வயதுப் பெண் (1) என்பதாலும் இது போன்ற சாதனையைச் செய்த முதல் அமெரிக்கப் பெண்ணும் அவர்தான். (1) அதனால், படகுப்பயண சாதனைப் பதிவேட்டில் அவர் பெயர் இடம்பெற்றிருக்கும் என்று பலரும் நம்பினார்கள். (கருத்து 3, மொழி 1)

41. டானியா தன் கடற்பயணத்துக்குப் பின் என்ன செய்தார்? (2 மதிப்பெண்கள்)

41. டானியா தன் கடற்பயணத்துக்குப் பின் தன் பயண அனுபவங்களைப் பற்றி ஒரு புத்தகம் எழுதத் தொடங்கினார். (1)
(கருத்து 2, மொழி 1)